# பள்ளிக்கல்வித்துறை

## வேலூர் மாவட்டம்

## 10-ஆம் வகுப்பு
## தமிழ்

## குறுந்தேர்வு வினாத்தாள் தொகுப்பு

## 2018 - 2019

திரு. சா.மார்ஸ்
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர் மாவட்டம்

# குறுந்தேர்வு 1 - 2018-19

10 – ஆம் வகுப்பு **தமிழ் முதல் தாள்** மதிப்பெண்கள் : 30

---

குறுவினாக்கள் : (ப.எண்) **3X2=6**

1. உயிரினும் ஓம்பப்படுவது எது? ஏன்? (3)
2. கையுறைப் பொருட்களாகக் குகன் கொண்டு சென்றவை எவை? யாருக்குக் கொண்டு சென்றான்? (58)
3. உலகிலுள்ள மொழிகளுள் இலக்கிய, இலக்கண வளமுடைய மொழிகள் எத்தனை? (13)

சிறுவினாக்கள் : **2X4=8**

4. கண்ணகி குறித்து வாயிற்காவலன் கூறியவற்றைக் கூறுக. (34)
5. பெண்கல்வி குறித்துப் பெரியார் கூறும் கருத்துகள் யாவை? (41)

பாடல் வினா விடை : **4X1=4**

6. அரிகால் மாறிய அங்கண் அகல்வயல் (86)
மறுகால் உழுத ஈரச் செறுவின்
வித்தொடு சென்ற வட்டி பற்பல
மீனொடு பெயரும் யாணர் ஊர.
   - அ) அங்கண் – பிரித்து எழுதுக.
   - ஆ) அரி என்பதன் பொருள் யாது?
   - இ) சென்ற வட்டி இலக்கணக்குறிப்பு தருக.
   - ஈ) யாணர் என்பதன் பொருள் யாது?

நெடுவினா : **1X8=8**

7. ஒழுக்கமுடைமை பற்றி வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக. (3–5)

மனப்பாடம் : **1X4=4**

8. 'மெய்தான் அரும்பி' எனத் தொடங்கும் திருவாசகப் பாடலை எழுதுக. (1)

# குறுந்தேர்வு 2 - 2018-19

10 – ஆம் வகுப்பு **தமிழ் முதல் தாள்** மதிப்பெண்கள் : 30

குறுவினாக்கள் : (ப.எண்) **3X2=6**

1. கம்பர் – சிறுகுறிப்பு எழுதுக. (65)
2. தொல்காப்பியம் குறித்து முனைவர் எமினோ கூறுவது யாது? (16)
3. தமிழ்மொழியின் தனித்தன்மைகளை எழுதுக. (15)

சிறுவினாக்கள் : **2X4=8**

4. சீதை, இலக்குவன் ஆகியோரிடம் குகனைப் பற்றி இராமன் கூறியதென்ன? (62)
5. மணக்கொடை குறித்துப் பெரியார் கூறுவன யாவை? (43)

பாடல் வினா விடை : **(88)** **4X1=4**

6. பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைப்படச் சேயஆயினும் தொடை புணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங்கு என்றும் சான்றோர்
சான்றோர் பாலர் ஆப
சாலார் சாலார் பாலர் ஆகுபவே

அ) இப்பாடல் இடம்பெற்றுள்ள நூலின் பெயரென்ன?
ஆ) மாமலை இலக்கணக்குறிப்பு தருக.
இ) காமருமணி பொருள் தருக.
ஈ) நன்கலம் – பிரித்து எழுதுக.

நெடுவினா : **1X8=8**

7. செம்மொழிக்குரிய எவையேனும் ஐந்து தகுதிப்பாடுகளை விளக்கி எழுதுக. (14–16)

மனப்பாடம் : **1X4=4**

8. 'மெய்தான் அரும்பி' எனத் தொடங்கும் திருவாசகப் பாடலை எழுதுக. (1)

# குறுந்தேர்வு 3 - 2018-19

10 – ஆம் வகுப்பு **தமிழ் முதல் தாள்** மதிப்பெண்கள் : 30

குறுவினாக்கள் : (ப.எண்) **3X2=6**

**1.** ஒருமொழி நிலைபெற்று நிற்பதற்குரிய தகுதிப்பாடுகள் யாவை? (13)

**2.** மொழிமாற்றம் என்றால் என்ன? (113)

**3.** கல்விப்படங்களின் வாயிலாக நாம் அறிவன யாவை? (115)

சிறுவினாக்கள் : **2X4=8**

**4.** பெண்ணுரிமையை விளக்குக. (42)

**5.** அம்பேத்கர் பெற்ற கல்வித் தகுதிகள் யாவை? (69)

பாடல் வினா விடை : **(86)** **4X1=4**

**6.** நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
செல்வம் அன்றுதன் செய்வினைப் பயனே
சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வம் செலவமென் பதுவே

அ) இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

ஆ) இப்பாடலின் ஆசிரியர் யார்?

இ) நெடியமொழிதலும் கடியஊர்தலும் இலக்கணக்குறிப்பு தருக.

ஈ) புன்கண் – பிரித்து எழுதுக.

நெடுவினா : **1X8=8**

**7.** காலமறிதலை வள்ளுவர் வழிநின்று விளக்குக. (5–7)

மனப்பாடம் : **1X4=4**

**8.** ‘வாயிற் கடைமணி’ எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடலை எழுதுக. (33)

# குறுந்தேர்வு 4 - 2018-19

10 – ஆம் வகுப்பு **தமிழ் முதல் தாள்** மதிப்பெண்கள் : 30

குறுவினாக்கள் : (ப.எண்) **3X2=6**

1. திருவள்ளுவருக்கு வழங்கும் வேறுபெயர்கள் யாவை? (7)
2. குகனின் வேண்டுகோள் யாது? (61)
3. அம்பேத்கர் குறித்து நேரு புகழ்ந்து கூறியது யாது? (72)

சிறுவினாக்கள் : **3X4=12**

4. தலைவனுக்குத் தோழி கூறும் செய்தியினை நற்றிணைப் பாடல்வழித் தொகுத்தெழுதுக. (86)
5. சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை? (88)
6. கல்வி வளர்ச்சிக்கு அம்பேத்கர் ஆற்றிய பணி யாது? (70–71)

நெடுவினா : **1X8=8**

7. பெண் முன்னேற்றத்திற்கான அடிப்படைத் தேவைகளாகப் பெரியார் கூறியுள்ளவற்றைத் தொகுத்தெழுதுக. (41–42)

மனப்பாடம் : **1X4=4**

8. ‘விடுநனி’ எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை எழுதுக.(63)

# குறுந்தேர்வு 5 - 2018-19

10 – ஆம் வகுப்பு **தமிழ் முதல் தாள்** மதிப்பெண்கள் : 30

குறுவினாக்கள் : (ப.எண்) **3X2=6**

1. "அன்புள இனி நாம்ஓர் ஐவர்கள் உளரானோம்" - யார், யாரிடம் கூறியது? (64)
2. அம்பேத்கருக்குப் பீம் என பெயர் வைக்கக் காரணம் என்ன? (69)
3. திரைப்படச்சுருள் பற்றி நீவீர் அறிவன யாவை? (114)

சிறுவினாக்கள் : **3X4=12**

4. பேச்சின் தொடக்கம் எவ்வாறு அமைதல் வேண்டும்? (91)
5. பேச்சினை முடிக்கும் முறைகள் சிலவற்றை எழுதுக. (92)
6. பேச்சுக்கலையில் மொழியும் முறையும் எவ்வாறு அமைதல் வேண்டும்? (90–91)

நெடுவினா : **1X8=8**

7. "தேரா மன்னா" - என விளித்துக் கண்ணகி கூறியன யாவை? (34–35)

மனப்பாடம் : **1X4=4**

8. 'துன்புள தெனின்' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை எழுதுக. (64)

## குறுந்தேர்வு 6 - 2018-19

10 – ஆம் வகுப்பு **தமிழ் முதல் தாள்** மதிப்பெண்கள் : 30

குறுவினாக்கள் : (ப.எண்) **3X2=6**

1. அப்பூதியடிகள் எத்தகைய பண்பாளர்? (104)
2. அணு பற்றிய கம்பரின் கருத்து யாது? (159)
3. மொழிக்குரிய செவ்வியல் தன்மைகள் யாவை? (13)

சிறுவினாக்கள் : **3X4=12**

4. செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதற்குப் பாரதிதாசன் கூறும் வழிகள் யாவை? (39)
5. விருத்தமாதவரை நோக்கி இராமன் கூறியவை யாவை? (60–61)
6. மணக்கொடை குறித்துப் பெரியார் கூறுவன யாவை? (43)

நெடுவினா : **1X8=8**

7. மேடைப்பேச்சின் கூறுகளை விளக்குக. (91–92)

மனப்பாடம் : **1X4=4**

8. 'நல்லதாய் தந்தைஏவ' எனத் தொடங்கும் பெரியபுராணப் பாடலை எழுதுக. (108)

## குறுந்தேர்வு 7 - 2018-19

10 – ஆம் வகுப்பு **தமிழ் முதல் தாள்** மதிப்பெண்கள் : 30

குறுவினாக்கள் : (ப.எண்) **3X2=6**

**1.** கொடுங்கடலால் கொள்ளப்பட்ட தமிழகப் பகுதிகள் யாவை? (129)

**2.** ஏற்றுமதி இறக்குமதி குறித்துக் கூறும் நூல்கள் யாவை? (130)

**3.** ஞாலம் – பெயர்க்காரணம் கூறுக. (158)

சிறுவினாக்கள் : **2X4=8**

**4.** கடல் வாணிபம் குறித்து எழுதுக. (130)

**5.** உழவுத்தொழில் குறித்து எழுதுக. (131)

பாடல் வினா விடை : **(127)** **4X1=4**

**6.** குட்டிச் செவியறுத்துக் கூட்டித் தலைகளெல்லாம்
வெட்டிக் களைபறிக்க மேலாய்தூர் – கட்டி
வளர்ந்தனை பால் முந்திரிகை வாழைக்கனியாய்க்
கிளர்ந்தகரும் பாய்நாளிகேரத்து – இளங்கனியாய்

அ) இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

ஆ) இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடியெதுகைகளை எடுத்தெழுதுக.

இ) செவியறுத்து – பிரித்து எழுதுக.

ஈ) நாளிகேரம் பொருள் யாது?

நெடுவினா : **1X8=8**

**7.** பெரியாரைத் துணையாகக் கொள்வது குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளை தொகுத்தெழுதுக. (148–150)

மனப்பாடம் : **1X4=4**

**8.** ‘இன்று தொட்டிவண்’ எனத் தொடங்கும் சீறாப்புராணம் பாடலை எழுதுக. (178)

# குறுந்தேர்வு 8 - 2018-19

10 – ஆம் வகுப்பு **தமிழ் முதல் தாள்** மதிப்பெண்கள் : 30

குறுவினாக்கள் : (ப.எண்) **3X2=6**

1. வயலின் வரப்புகளாக கூறப்படுவன யாவை? (127)
2. வன்மையுள் எல்லாந் தலையாயது எது? (149)
3. மருந்தில்லா மருத்துவம் பற்றி திருவள்ளுவர் கூறுவதென்ன?(160)

சிறுவினாக்கள் : **2X4=8**

4. சீறாப்புராணம் குறிப்பு எழுதுக. (179)
5. காந்தியடிகளைக் கவர்ந்த நாடகம் எது? விளக்குக. (181)

பாடல் வினா விடை : **(127)** **4X1=4**

6. தித்திக்குந் தெள்ளமுதாய் தெள்ளமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே – புத்திக்குள்
உண்ணப் படுந்தேனே உன்னோ டுவந்துரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள்

அ) முத்தமிழ் – இத்தொகைச் சொல்லை விரித்தெழுதுக.
ஆ) இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடியெதுகைகளை எடுத்தெழுதுக.
இ) உன்னோடுவந்துரைக்கும் – பிரித்தெழுதுக.
ஈ) விளம்பக்கேள் பொருள் தருக.

நெடுவினா : **1X8=8**

7. தமிழன் அறிவியலின் முன்னோடி என்பதனை விளக்குக.(157–160)

மனப்பாடம் : **1X4=4**

8. 'பல்லார்' எனத் தொடங்கும் குறளை அடிப்பிறழாமல் எழுதுக.(150)
9. 'செயின்' எனத் முடியும் குறளை அடிப்பிறழாமல் எழுதுக. (6)

## குறுந்தேர்வு 9 - 2018-19

10 – ஆம் வகுப்பு **தமிழ் முதல் தாள்** மதிப்பெண்கள் : 30

குறுவினாக்கள் : (ப.எண்) **3X2=6**

1. வேந்தற்குரிய பொருள்கள் யாவை? (152)
2. காந்தியடிகளின் அறவழிப் போராட்டத்தில் உருவான இயக்கங்கள் யாவை? (182)
3. காந்தியடிகள் எதனைப் பாவம் என்கிறார்? (183)

சிறுவினாக்கள் : **3X4=12**

4. புலியின் கொடுஞ்செயல்கள் பற்றி உமறுப்புலவர் கூறுவன யாவை? (175)
5. மனிதநேயம் குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது? (183)
6. இன்னா செய்யாமை குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது?(184)

பாடல் வினா விடை : **(127)** **4X1=4**

7. அரியா சனமுனக்கே யானால் – உனக்குச்
சரியாரும் உண்டோ தமிழே – விரிவார்த்
திகழ்ப்பா ஒருநான்குஞ் செய்யுள் வரம்பாகப்
புகழ்ப்பா வினங்கள் மடைப்போக்கா

அ) அரியாசனம் பொருள் தருக.
ஆ) இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடியெதுகைகளை எடுத்தெழுதுக.
இ) பாவினங்கள் – பிரித்து எழுதுக.
ஈ) வயலின் வரப்புகளாகக் கூறப்படுவன யாவை?

நெடுவினா : **1X8=8**

8. பொருள்செயல்வகை என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் வளமார்ந்த கருத்துகளைத் தொகுத்தெழுதுக. (151–153)

# குறுந்தேர்வு 10 - 2018-19

10 – ஆம் வகுப்பு **தமிழ் முதல் தாள்** மதிப்பெண்கள் : 30

குறுவினாக்கள் : (ப.எண்) **5X2=10**

1. வயல் தரும் விளைவுகளாகத் தமிழ்விடு தூது கூறுவன யாவை? (127)
2. போலிப்புலவர்களைத் தண்டிப்போர் யாவர்? (128)
3. பொருளல்லவரைப் பொருளாகச் செய்வது எது? (151)
4. எவற்றை அறநெறியாகப் போற்றவேண்டும் என்று காந்தியடிகள் கூறினார்? (182–183)
5. இந்தியாவின் வாழ்வு குறித்துக் காந்தியடிகள் கூறுவது யாது? (184)

சிறுவினாக்கள் : **1X4=4**

6. நபிகள் நாயகத்தைக் கண்ட புலியின் நிலையை எழுதுக. (176–177)

பாடல் வினா விடை : (127) **4X1=4**

7. நல்லேரினால் செய்யுள் நாற்கரணத் தேர்ப்பூட்டிச்
சொல்லேர் உழவர்த் தொகுத்தீண்டிச் – நல்லநெறி
நாலே விதையா நனிவிதைத்து நாற்பொருளும்
மேலே பலன்பெறசெய் விக்குநாள்

   அ) நல்லேரினால் – பிரித்து எழுதுக.
   ஆ) சொல்லேர் உழவர் யார்?
   இ) நாற்கரணத்து ஏர்கள் யாவை?
   ஈ) இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடியெதுகைகளை எடுத்தெழுதுக.

நெடுவினா : **1X8=8**

8. தமிழர் இசைக்கலை குறித்துத் தொகுத்தெழுதுக. (130–131)

மனப்பாடம் : **2X2=4**

9. ‘நன்றிக்கு’ எனத் தொடங்கும் குறளை அடிப்பிறழாமல் எழுதுக. (4)
10. ‘விடல்’ எனத் முடியும் குறளை அடிப்பிறழாமல் எழுதுக. (150)

# குறுந்தேர்வு 11 - 2018-19

10 – ஆம் வகுப்பு **தமிழ் முதல் தாள்** மதிப்பெண்கள் : 30

குறுவினாக்கள் : (ப.எண்) **5X2=10**

1. தேவாரம் – பொருள் எழுதுக. (155)
2. சிவபெருமான் எத்தன்மையன் என நாவுக்கரசர் கூறுகிறார்? (155)
3. யாருக்குப் பகைவராலும் தீங்கு செய்ய இயலாது? (149)
4. காந்தியடிகளைக் கவர்ந்த குஜராத் பாடலின் கருத்து யாது? (181)
5. இயேசுவின் மலைப்பொழிவு நூலைப் படித்து காந்தியடிகள் உணர்ந்தது என்ன? (182)

பாடல் வினா விடை : **(127)**

**4X1=4**

7. பாத்தனதாக் கொண்ட பிள்ளைப்பாண்டியன் – வில்லிஒட்டக்
கூத்தனிவர் கல்லாது கோட்டிக்கொளும் – சீத்தையரைக்
குட்டிச் செவியறுத்துக் கூட்டித் தலைகளெல்லாம்
வெட்டிச் களைபறிக்க வேமலாய்த்தூர் – கட்டி

   அ) இப்பாடலில் குறிப்பிடப்படும் புலவர்கள் யார்?
   ஆ) செவியறுத்து – பிரித்து எழுதுக.
   இ) சீத்தையர் என்பதன் பொருள் யாது?
   ஈ) இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடியெதுகைகளை எடுத்தெழுதுக.

நெடுவினா : **2X8=16**

8. தமிழ் எவ்விதம் செழித்து வளர்ந்ததாகத் தமிழ்விடு தூது கூறுகிறது? (127–128)
9. தமிழரின் மருத்துவ அறிவுகுறித்துக் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக. (159–160)

## குறுந்தேர்வு 12 - 2018-19

10 – ஆம் வகுப்பு **தமிழ் முதல் தாள்** மதிப்பெண்கள் : 30

குறுவினாக்கள் : (ப.எண்) **5X2=10**

**1.** ஆற்றுதல் என்பது யாது? (202)

**2.** பண்பு எனப்படுவது யாது? (202)

**3.** கலம்பக நூல்களுள் முதல் நூல் எது? (204)

**4.** இராமலிங்கர் எங்கு, எப்போது பிறந்தார்? (207)

**5.** வள்ளலாரின் முழக்கம் யாது? (209)

பாடல் வினா விடை : (202) **4X1=4**

**6.** அறிவெனப் படுவது பேதையார் சொல்நோன்றல்
செறிவெனப் படுவது கூறியது மறாஅமை
நிறையெனப் படுவது மறைபிறர் அறியாமை
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்

அ) இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

ஆ) அறிவெனப்படுவது யாது?

இ) பொறை என்பதன் பொருள் யாது?

ஈ) பொறுத்தல் என்பதன் இலக்கணக்குறிப்பு யாது?

நெடுவினா : **2X8=16**

**7.** புலி வசனித்த படலத்தின் கருத்துகளைத் தொகுத்து எழுதுக. (173–179)

**8.** தொழிற்கல்வி, தொழில்நுட்பக் கல்வி குறித்து விரிவாக எழுதுக. (232–233)

# குறுந்தேர்வு 13 - 2018-19

10 – ஆம் வகுப்பு **தமிழ் முதல் தாள்** மதிப்பெண்கள் : 30

**குறுவினாக்கள் : (ப.எண்) 5X2=10**

1. கலம்பக உறுப்புகள் நான்கினை எழுதுக. (204)
2. நந்திக்கலம்பகம் யார் மீது பாடப்பெற்றது? (204)
3. ஆழ்வார்கள் பாடிய பாடலின் தொகுப்பின் பெயரென்ன? (206)
4. பட்டப்படிப்புகளில் எவையேனும் நான்கனை எழுதுக. (236)
5. கண்ணிடந்து அப்பியவர் யார்? அவர் வரலாறு உணர்த்தும் செய்தி யாது? (160)

**பாடல் வினா விடை : (205) 4X1=4**

6. மீன்நோக்கும் நீள்வயல்சூழ் வித்துவக்கோட் டம்மாஎன்
பானோக்கா யாகிலுமுன் பற்றல்லால் பற்றில்லேன்
தானோக்கா தெத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்
கோனோக்கி வாழுங் குடிபோன் றிருந்தேனே.

அ) இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

ஆ) இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடியெதுகைகளை எடுத்தெழுதுக.

இ) தார்வேந்தன் பொருள் யாது?

ஈ) கோல்நோக்கி இலக்கணக்குறிப்பு யாது?

**நெடுவினா : 2X8=16**

7. வாழ்க்கையில் அனைவரும் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் பற்றிக் கலித்தொகைப் பாடல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக. (202)
8. கலை அறிவியல் கல்வி, சிறுதொழில் கல்வி குறித்து விவரிக்க. (233)

# குறுந்தேர்வு 1 - 2018-19

10 – ஆம் வகுப்பு **தமிழ் இரண்டாம் தாள்** மதிப்பெண்கள் : 40

சுருக்கமான விடையளிக்க : (ப.எண்) **6X1=6**

1. வல்லினம் மிகும் இடங்களுள் ஏதேனும் ஒன்றினைக் கூறி சான்று தருக. (142–143)
2. சந்திப்பிழைகளை நீக்கி எழுதுக.
   கயிற்று கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான். (28)
3. ஒருமை பன்மை பிழைகளை நீக்கி எழுதுக.
   அவன் கவிஞன் அல்ல. (28)
4. நிறுத்தற்குறி இட்டு எழுதுக.
   சட்டத்தை மதிப்போம் குற்றம் களைந்த வாழ்வு வாழ்வோம் சட்டம் நம்மைக் காக்கும். (78)
5. மொழியமுது. (உருவகத்தை உவமையாக்குக). (121)
6. உண். (வேர்ச்சொல்லை வினைமுற்றாக்குக). (49)

குறுவினாக்கள் : **2X2=4**

7. ஔகாரக்குறுக்கம் என்றால் என்ன? சான்று தருக. (22)
8. சொல் என்றால் என்ன? (48)

ஐந்து மதிப்பெண் வினாக்கள் **2X5=10**

9. தற்குறிப்பேற்ற அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக. (241)
10. பரிதிமாற்கலைஞரின் தமிழ்ப்பற்றினை விளக்குக. (20)

**1X10=10**

11. குடிநீர் வசதி வேண்டி நகராட்சி ஆணையருக்குக் கடிதம் ஒன்று வரைக.

12. மழை என்னும் தலைப்பில் கவிதை எழுதுக. **1X5=5**

13. கவிதா என்பவர் வங்கியில் ரூ. 10,000 செலுத்தச் செல்கிறார். படிவத்தை நிரப்புக **1X5=5**

# குறுந்தேர்வு 2 - 2018-19

10 – ஆம் வகுப்பு **தமிழ் இரண்டாம் தாள்** மதிப்பெண்கள் : 40

சுருக்கமான விடையளிக்க : (ப.எண்) **6X1=6**

1. வல்லினம் மிகா இடங்களுள் ஏதேனும் ஒன்றனைக் கூறி சான்று தருக. (144–145)
2. நாற்பொருள் (தொகைச்சொல்லை விரித்தெழுதுக) (53)
3. உரிய வேற்றுமை உருபை இணைத்து எழுதுக.
   மாணாக்கர்கள் வட்டமாக உட்காரச் செய்க. (83)
4. உவம உருபை எடுத்து எழுதுக.
   கிளிபோலப் பேசினாள். (122)
5. தொடரை மாற்றி எழுதுக.
   திருக்குறளை அனைவரும் அறிவர் (வினாத்தொடராக்குக) (28)
6. தொடர் எவ்வகையானது எனக் கூறுக.
   எங்கிருந்தாலும் வாழ்க. (24–25)

குறுவினாக்கள் : **2X2=4**

7. ஐகாரக்குறுக்கம் என்றால் என்ன? சான்று தருக. (22)
8. மொழியின் வகைகள் யாவை? (48)

ஐந்து மதிப்பெண் வினாக்கள் : **2X5=10**

9. வெண்பாவின் பொதுவிலக்கணம் யாது? (216)
10. கொடுக்கப்பட்டுள்ள குறளுக்கு அலகிட்டு வாய்பாடு தருக. (3)
    பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
    தேரினும் அஃதே துணை.
11. கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு ஒருபக்க அளவில் கட்டுரை வரைக. (55) **1X10=10**
    முன்னுரை – சிறுதுளிப் பெருவெள்ளம் – சிக்கன வாழ்வு – சிக்கனமும் சிறுசேமிப்பும் – சேமிப்பின் அவசியம் – சேமிக்கும் முறைகள் – நன்மைகள் – முடிவுரை.
12. கடல் என்னும் தலைப்பில் கவிதை எழுதுக. (200) **1X5=5**

13. தீயவை தீய பயத்தலால் தீயவை
    தீயினும் அஞ்சப் படும் **1X5=5**
    – இதில் பயின்று வரும் அணியை விளக்குக.

# குறுந்தேர்வு 3 - 2018-19

10 – ஆம் வகுப்பு **தமிழ் இரண்டாம் தாள்** மதிப்பெண்கள் : 40

**சுருக்கமான விடையளிக்க. (ப.எண்)** **6X1=6**

**1.** **இருபொருள் தருக.**
ஆறு **(123)**

**2.** **வழூஉச் சொற்களைத் திருத்தி எழுதுக.**
**வலதுப் பக்கச் சுவற்றில் எழுதுக. (28)**

**3.** **பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்சொல்லை எழுதுக.**
**இந்த ஷர்ட் மிகவும் காஸ்ட்லியானது. (83)**

**4.** **மரபுத்தொடர் குறிக்கும் பொருளை எழுதுக.**
**ஆயிரங்காலத்துப் பயிர். (122)**

**5.** **இளமைப் பெயரை எழுதுக.**
**சிங்கம். (83)**

**6.** **உரிய வினைமரபுச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.**
**பாரதியார் செய்யுளை –––– (பாடினார்/இயற்றினார்)**

**குறுவினாக்கள் :** **2X2=4**

**7.** **வினைமுற்றைக் கொண்டு எவ்வெவற்றை அறியலாம்? (49)**

**8.** **முற்றெச்சம் என்றால் என்ன? சான்று தருக. (52)**

**ஐந்து மதிப்பெண் வினாக்கள் (மாதிரி 225–226)** **2X5=10**

**9.** **பாநயம் பாராட்டுக.**

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
    தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்.
இறவாத புகழுடைய புதுநூல்கள்
    தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்.
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
    சொல்வதிலோர் மகிமை இல்லை.
திறமான புலமையெனில் வெளிநாட்டவர்
    அதை வணக்கம் செய்ய வேண்டும்.

*–பாரதியார்.*

**10.** **கொடுக்கப்பட்டுள்ள தலைப்பில் எட்டுவரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக. முயற்சி (200)**

**11.** **கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக. (13-17** **1X10=10**

**தமிழ்மொழியின் பழமை – செம்மொழித் தகுதிப்பாடுகள் – தாய்மை – தனித்தன்மை – இலக்கிய வளம் – இலக்கண சிறப்பு – தமிழ்மொழியின் தனித்தன்மை.**

**12.** **பேருந்து வசதி வேண்டி போக்குவரத்து கழக மேலாண்மை இயக்குநருக்கு கடிதம் வரைக.**

# குறுந்தேர்வு 4 - 2018-19

10 – ஆம் வகுப்பு **தமிழ் இரண்டாம் தாள்** மதிப்பெண்கள் : 40

சுருக்கமான விடையளிக்க : (ப.எண்) **2X1=2**

1. உவமைகளை சொற்றொடரில் அமைத்து எழுதுக.
   பசுமரத்தாணிப்போல (19)
2. இலக்கணக்குறிப்பு எழுதுக. எய்தாப் பழி (4)
3. கொடுக்கப்பட்டுள்ள அரபு எண்களுக்குரிய தமிழெண்களை எழுதுக. **2X1=2**
   58, 47. (29)
4. கொடுக்கப்பட்டுள்ள ஆங்கில பழமொழிக்குரிய தமிழ் பழமொழியினை எழுதுக. (31) **2X1=2**
   **1. Health is Wealth. 2. Too much of anything is good for nothing.**

குறுவினாக்கள் : **2X2=4**

5. வெளிப்படை என்றால் என்ன? சான்று தருக. (76)
6. இனங்குறித்தல் என்றால் என்ன? சான்று தருக. (80)
7. கொடுக்கப்பட்டுள்ள சூழலை புரிந்து கொண்டு வினாக்களுக்கு விடையளிக்க. **1X3=3**
   மாறன், வளவனின் நெருங்கிய நண்பன். சில நாளாக உடல் நலமில்லாமல் இருந்து மாறன் நேற்று எதிர்பாராதவிதமாக மாடிப்படியிலிருந்து கீழே விழுந்ததில் முற்றிலுமாகத் தன் நினைவை இழந்துவிட்டான். மாறனின் நிலைகண்டு வளவன் மிகவும் வருத்தமடைந்தான். உணவு உண்பதற்குக்கூட அவனுக்குப் பிடிக்கவில்லை. அவனுடைய மனவருத்தம் பெற்றோருக்குத் தெரிந்திருந்தது. அவர்கள் எவ்வளவு தான் ஆறுதல் மொழிகள் கூறினாலும் அவனால் நண்பனுக்கு ஏற்பட்ட துன்பத்தைத் தாங்கிக்கொள்ள இயலவில்லை.
   1. வளவன் ஏன் மனவருத்தத்தோடு இருந்தான்?
   2. நமக்குத் தாங்க இயலாத துன்பம் ஏற்படும் போது அதிலிருந்து மீள வழி யாது?
   3. இச்சூழலில் பயன்படுத்த வேண்டிய வாழ்வியல் திறன் யாது?
8. கொடுக்கப்பட்டுள்ள பத்தியிலுள்ள ஆங்கில சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களை எழுதுக. **1X2=2**
   சண்டே வர்றதுக்கு இன்னும் ஸிக்ஸ் டேஸ் இருக்குதே டோண்ட் வொரி டுமாரோ ஈவினிங் ஷாப்பிங் போலாம். இப்ப உனக்கு ஹேப்பிதானே.
9. கொடுக்கப்பட்டுள்ள பத்தியைக் கொண்டு ஒரு சிறுகதை எழுதுக. **1X5=5**
   ஓர் ஊரில் மக்கள் சோம்பலாக இருப்பதைப் பார்த்த மன்னன் அவர்களை மாற்ற நினைத்தான். மக்கள் நாள்தோறும் செல்லும் வழியில் பெரிய பாறாங்கற்களைப் போட்டு வைத்தான். அதற்கு அடியில் பெரும் புதையலை ஒளித்து வைத்தான். புதையலை கண்டுபிடிப்பவர்களுக்கு அது சொந்தம் என அறிவித்தான். ஒரு நாள்.....
10. நூலக வசதி வேண்டி பொது நூலகத்துறை இயக்குநருக்குக் கடிதம் ஒன்று வரைக. (195) **1X10=10**
11. ராஷியா என்பவர் ரூ. 15,000 வங்கியில் பணம் எடுக்கச் செல்கிறார். படிவம் நிரப்புக (146) **5**
12. சொல் பின்வருநிலை அணியை விளக்குக. (243) **5**

# குறுந்தேர்வு 5 - 2018-19

10 – ஆம் வகுப்பு **தமிழ் இரண்டாம் தாள்** மதிப்பெண்கள் : 40

சுருக்கமான விடையளிக்க : (ப.எண்) **6X1=6**

1. வல்லினம் மிகும் இடங்களுள் ஏதேனும் ஒன்றனைக் கூறி சான்று தருக. (142–143)
2. சந்திப் பிழைகளை நீக்கி எழுதுக.
   ஏழைகளுக்கு பொருள்பெறாமல் வாதாடி நீதி பெற்று தந்தார்.
3. ஒருமை பன்மை பிழைகளை நீக்கி எழுதுக. (41)
   பெண்கள் பெற வேண்டியது பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை.
4. நிறுத்தற்குறி இட்டு எழுதுக. (233)
   தொலைக்காட்சி குளிரூட்டும் கருவி கைப்பேசி கணினி முதலியவற்றைப் பழுதுபார்க்கும் படிப்புகள் உள்ளன.
5. தமிழ்த்தேன் (உருவகத்தை உவமையாக்குக) (121)
6. பெற்றான் (வேர்சொல் தருக)

குறுவினாக்கள் : **2X2=4**

7. அடுக்குத்தொடர் என்றால் என்ன? சான்று தருக. (80)
8. பெயரெச்சம் என்றால் என்ன? சான்று தருக. (80)

ஐந்து மதிப்பெண் வினாக்கள் **2X5=10**

9. வஞ்சப்புகழ்ச்சி அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக. (241)
10. கமலநாதனின் மனம் மாறக் காரணம் என்ன? (46–47)

**1X10=10**

11. நீவீர் கண்டுகளித்த இடம் குறித்து நண்பனுக்கு கடிதம் ஒன்று வரைக. (196)

**1X10=10**

12. கட்டுரை எழுதுக
    அன்றாட வாழ்வில் நீர்ப்பற்றாக்குறை – நீரைச் சேமிக்கும் வழிகள்– மழைநீர் சேமித்தல் – நீரின்றி அமையாது உலகு.

# குறுந்தேர்வு 6 - 2018-19

10 – ஆம் வகுப்பு **தமிழ் இரண்டாம் தாள்** மதிப்பெண்கள் : 40

சுருக்கமான விடையளிக்க. (ப.எண்) **6X1=6**

1. வல்லினம் மிகா இடங்களுள் ஏதேனும் ஒன்றனைக் கூறி சான்று தருக. (144–145)
2. முத்தமிழ் (தொகைச்சொல்லை விர்த்தெழுதுக) (53)
3. உரிய வேற்றுமை உருபை எடுத்து எழுதுக. (83)
   நான் மழையில் நனைவது பிடிக்கும்.
4. உவம உருபை எடுத்து எழுதுக. (120)
   வேய்புரைத் தோள்.
5. தொடரை மாற்றி எழுதுக. (28)
   இமயமலை மிகவும் உயரமானது. (உணர்ச்சித்தொடராக்குக)
6. தொடர் எவ்வகையானது எனக் கூறுக. (28)
   தேசியக்கொடி தலைமையாசிரியரால் ஏற்றப்பட்டது.

குறுவினாக்கள் : **2X2=4**

7. வினா எத்தனை வகைப்படும்? (96)
8. பாம்போ? கயிரோ? – எவ்வகை வினா? (96)

ஐந்து மதிப்பெண் வினாக்கள் **2X5=10**

9. ஆசிரியப்பாவின் பொதுவிலக்கணம் கூறுக. (219)
10. கொடுக்கப்பட்டுள்ள குறளுக்கு அலகிட்டு வாய்பாடு தருக.
    அலகிடவும் (4)

    அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை
    ஒழுக்கம் இலான்கண் உயர்வு.

11. கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு ஒருபக்க அளவில் கட்டுரை எழுதுக. **1X10=10**
12. சுற்றுச்சூழல் – மாசுக் கட்டுபாடு – இயற்கையை அழித்தல் – காற்று மாசு – நச்சுப்புகை – நீர்மாசு – தொழிற்சாலையின் கழிவு – மாசடைந்த நீர் – ஒலி மாசு – ஒலிபெருக்கி இரைச்சல்– நரம்பு மண்டல பாதிப்பு – கட்டுப்படுத்தும் வழிகள்.

13. பாபு (60) தனது சகோதரி லீலா (55) தனது மகன் குமார் (5) ஆகியோருடன் மும்பை செல்ல உரிய படிவத்தில் முன்பதிவு செய்க. (228) **1X5=5**

14. அடுக்குத் தொடருக்கும் இரட்டைக் கிளவிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக. (81) **1X5=5**

# குறுந்தேர்வு 7 - 2018-19

10 – ஆம் வகுப்பு **தமிழ் இரண்டாம் தாள்** மதிப்பெண்கள் : 40

சுருக்கமான விடையளிக்க : (ப.எண்) **6X1=6**

1. இரு பொருள் தருக. மாலை (123)
2. வழூவுச் சொற்களை திருத்தி எழுதுக.
   இன்னக்கி ஒரு கிலோ அவரக்காய் வாங்கி வந்தேன்.
3. பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச்சொல்லை எழுதுக. (83)
   இறைவனை நோக்கி யாத்திரை செல்லல் பக்தருக்கான மார்க்கம்.
4. மரபுத்தொடர் குறிக்கும் பொருளை எழுதுக.
   முதலைக்கண்ணீர் (122)
5. இளமைப் பெயரை எழுதுக. புலி (83)
6. உரிய வினைமரபு சொல்லைத் தேர்ந்தெடுக்க. (224)
   வேடன் ––– அம்பு யானையை வீழ்த்தியது. (எய்த/.செலுத்த)

குறுவினாக்கள். **2X2=4**

7. சுட்டுவிடையை எடுத்துக்காட்டுடன் விளக்குக. (97)
8. உடன்பட்டுக் கூறும் விடையின் பெயரென்ன? (97)

ஐந்து மதிப்பெண்கள். (226)

9. பாநயம் பாராட்டுக. **2X5=10**

10. மனிதரெல்லாம் அன்புநெறி காண்ப தற்கும்
    மனோபாவம் வானைப்போல் விரிவடைந்து
    தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கிச்
    சகமக்கள் ஒன்றென்ப துணர்வ தற்கும்
    இனிதினிதாய் எழுந்த உயர் எண்ண மெல்லாம்
    இலகுவது புலவர்தரு சுவடிச் சாலை
    புனிதமுற்று மக்கள் புது வாழ்வு வேண்டில்
    புத்தகசா லைவேண்டும் நாட்டில் யாண்டும்.

    – *பாரதிதாசன்.*

11. கொடுக்கப்பட்டுள்ள தலைப்பில் எட்டு வரிகளுக்கு மிகாமல் கவிதை எழுதுக. குழந்தை (200)
12. கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக. (41-43) **10X1=10**
    பெண்கல்வி – பெண்ணுரிமை – சமுதாயத்தில் பெண்கள் நிலை – பெண்களுக்குச் சொத்துரிமை – பெண் விடுதலை – மணக்கொடை – பெண் கல்வியால் ஏற்பட்ட சமுதாய முன்னேற்றங்கள்.
13. தமிழாக்கம் தருக : 3
    Schools do not stop. With teaching the chidren the lessons alone. They do more. It is in the schools that the boys and girls from regular habits. They learn to behave in an orderly way. They are corrected whenever they do wrong.
14. தமிழ் பழமொழிகளை எழுதுக : 2
    **1. Prevention is better than cure**
    **2. Knowledge is power.**
15. அணியைச் சுட்டுக : 5
    பகல்வெல்லும் கூகையைக் காக்கை
    இகல் வெல்லும் வேந்தர்க்கு வேண்டும்பொழுது (5)

# குறுந்தேர்வு 8 - 2018-19

10 – ஆம் வகுப்பு **தமிழ் இரண்டாம் தாள்** மதிப்பெண்கள் : 40

சுருக்கமான விடையளிக்க : (ப.எண்) **2X1=2**

1. உவமைகளைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக. (99)
   மழை காணாப் பயிர்போல.
2. இலக்கணக்குறிப்பு தருக. வாழிய, வாழிய. (80)
3. கொடுக்கப்பட்டுள்ள அரபு எண்களுக்குரிய தமிழெண்களை எழுதுக. (102) **2X1=2**
   128, 437
4. கொடுக்கப்பட்டுள்ள ஆங்கில பழமொழிக்குரிய தமிழ் பழமொழியினை எழுதுக. **2X1=2**
   **1.Empty vessels make the greatest sound. (56)**
   **2.Little strokes fell great oaks. (103)**

குறுவினாக்கள். **2X2=4**

5. வடக்கு என்ற திசைப்பெயருடன் பிற திசைகள் சேரின் எவ்வாறு புணரும்? (138)
6. மையீற்றுப் பண்புப்பெயர்கள் நான்கினை எழுதுக. (139)
7. கொடுக்கப்பட்டுள்ள ஆங்கிலப் பத்தியைத் தமிழாக்கம் செய்க. (31) **3X1=3**

   Maps serve better than the printed pages for giving many kinds of information. In fact, people made and used maps before they learned how to read and write. Explorers have found maps that had been made by their ancestors. Sometimes these maps were carved on stones.

8. கொடுக்கப்பட்டுள்ள பத்தியிலுள்ள ஆங்கில சொற்களுக்கு இணையான தமிழ்சொற்களை எழுதுக. (172) **2X1=2**
   பள்ளியிலிருந்து வீட்டிற்குள் விரைந்து நுழைந்த பாரி தன் ஸ்கூல் பேக்கைத் தூக்கிப் போட்டு விட்டு மம்மி வாட்டர் என்று குரல் கொடுத்தான்.

9. கொடுக்கப்பட்டுள்ள பத்தியைக் கொண்டு ஒரு சிறுகதை எழுதுக. **5X1=5**

   வயதான தந்தைக்கு நான்கு மகன்கள் இருந்தார்கள். அவர்கள் எப்போதும் ஒற்றுமையின்றிச் சண்டையிட்டுக் கொண்டே இருந்தார்கள். அதனால் மனம் வருந்திய தந்தை அவர்களை எப்படியாவது திருத்த வேண்டும் என எண்ணினார். ஒரு நாள்.....

**10X1=10**

10. கல்விச் சுற்றுலாச் செல்ல அனுமதி கேட்டு தந்தைக்கு கடிதம் ஒன்று வரைக. (146)

**1X10=10**

11. நூலகத் துறையில் தட்டச்சர் பணிக்கு தன்விவரக் குறிப்பு வரைக (170-171)

# குறுந்தேர்வு 9 - 2018-19

10 – ஆம் வகுப்பு **தமிழ் இரண்டாம் தாள்** மதிப்பெண்கள் : 40

(ப.எண்) **5X1=5**

1. பாரி பாரி என்று பல ஏத்தி **(241)**
   ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
   பாரி ஒருவனு மல்லன்
   மாரியும் உண்டீண் டுலகு புரப்பதுவே – இப்பாடலில் பயின்று வரும் பாவினைச் சுட்டி விளக்கம் தருக.
2. பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம் **(244)**
   சால மிகுத்துப் பெயின் – இப்பாடலில் வரும் அணியைச் சுட்டி விளக்கம் தருக. **5X1=5**
3. கொடுக்கப்பட்டுள்ள ஆங்கிலப் பத்தியைத் தமிழாக்கம் செய்க. **(56)** **3X1=3**

   Trees are very useful to us. They give us timber and fire woods. The timber is used to make chairs. Tables and other furniture. We get of some trees are used to prepare medicines.
4. சூழலைப் புரிந்துகொண்டு வினாக்களுக்கு விடையளிக்க. **2X1=2**

   விழிமாற்றுத் திறனாளி ஒருவர் சாலையைக் கடப்பதற்காக நெடுநேரமாகக் காத்துக்கொண்டு இருந்தார். அந்த வழியாகப் பலரும் கடந்துச் செல்கின்றனர். ஆனால், அவருக்கு உதவ ஒருவரும் முன்வரவில்லை.

   1. இது போன்றதொரு சூழலில் நீ எவ்வாறு செயல்படுவாய்?
   2. பிறருக்கு உதவுவதால் வெளிப்படும் பண்பு யாது?

5. கொடுக்கப்பட்டுள்ள தலைப்பில் எட்டு வரிகளுக்கு மிகாமல் கவிதை எழுதுக. பள்ளி **(200)** **1X5=5**

6. கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு ஒருபக்க அளவில் கட்டுரை எழுதுக. **1X10=10**

   கணினி தோற்றம் – வளர்ச்சி – இணையம் – இணையதள வசதி – கணினிவழிக்கல்வி – கணினியின் வியத்தகு சாதனைகள் – பயன்படும் துறைகள் – உலகம் உள்ளங்கையில்.

**1X10=10**

7. சாலை வசதி வேண்டி ஊராட்சி மன்றத் தலைவருக்கு கடிதம் வரைக.

# குறுந்தேர்வு 10 - 2018-19

10 – ஆம் வகுப்பு **தமிழ் இரண்டாம் தாள்** மதிப்பெண்கள் : 40

சுருக்கமான விடையளிக்க : (ப.எண்) **5X1=5**

1. பாநயம் பாரட்டுக. (225)

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்க் கெல்லாம் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும்வேண் டுவனே.

– *இராமலிங்கர்.*

2. சொற்பொருள் பின்வருநிலையணியைச் சான்றுடன் விளக்குக.5 (243)

3. கொடுக்கப்பட்டுள்ள ஆங்கிலப் பத்தியைத் தமிழாக்கம் செய்க. **3X1=3**

Early to bed and early to rise make a man healthy. Wealthy, and wise. The early riser has more time and energy to prepare for the day's work than the late riser. besides, he finds himself fresh and brisk, early morning is the most suitable time for study. As the mind is fresh, even a difficult study is made easy.

4. சூழலைப் புரிந்துகொண்டு வினாக்களுக்கு விடையளிக்க. (146) **2X1=2**

மதியழகன் பத்தாம் வகுப்பு படிக்கிறான். மேற்கொண்டு திரைப்படக் கல்லூரியில் சேர்ந்து படிக்க வேண்டும் என்று அவன் விரும்புகிறான். வீட்டில் அவன் பெற்றோரோடு ஒரு நாள் பேசிக்கொண்டிருக்கும் போது தன் எண்ணத்தை வெளியிடுகிறான். அதைக் கேட்டதும் தந்தை அவன் மீது சினம் கொள்கிறார். ஏனெனில் அவன் மிகச் சிறந்த பொறியாளனாக வரவேண்டும் என்பது அவருடைய விருப்பம். மதியழகன் தந்தையிடம் எப்படிச் சொல்லி புரியவைப்பது என்று தடுமாறுகிறான்.

1. தந்தையின் சினம் சரியானதா?
2. தந்தையை மதியழகன் எவ்வாறு சம்மதிக்க வைப்பான்?

5. கொடுக்கப்பட்டுள்ள தலைப்பில் எட்டு வரிகளுக்கு மிகாமல் கவிதை வரைக. (200) **5X1=5**

நட்பு

6. மின்விளக்கு வசதி வேண்டி மின்வாரிய பொறியாளர் அவர்களுக்கு கடிதம் ஒன்று வரைக. (171) **1X10=10**

7. நான் விரும்பும் தலைவர் என்ற தலைப்பில் கட்டுரை வரைக. (பெரியார், அம்பேத்கர், எம்.ஜி.ஆர்) (171) **1X10=10**

# குறுந்தேர்வு 11 - 2018-19

10 – ஆம் வகுப்பு **தமிழ் இரண்டாம் தாள்** மதிப்பெண்கள் : 40

குறுவினாக்கள் : (ப.எண்) **5X2=10**

1. முதற்பொருள் என்பது யாது? (166)
2. ஐப்பசி கார்த்திகை ஆகிய இருதிங்களும் எக்காலத்துக்குரியன? (167)
3. முல்லை நிலத்துக்குரிய கருப்பொருள்கள் நான்கினை எழுதுக.(168)
4. புறத்திணைகள் நான்கினை எழுதுக. (190)
5. மதில்போர்கள் பற்றிய புறத்திணைகள் யாவை? (190)

ஐந்து மதிப்பெண் வினாக்கள் : **2X5=10**

6. குறட்டை ஒலி என்னும் கதையில் இடம்பெறும் மருமகனின் கருணை உள்ளத்தை எழுதுக. **(162-164)**

7. அண்ணா எழுதிய கடிதத்தில் இடம்பெறும் கருத்துகளைச் சுருக்கி எழுதுக. (194–195)

8. கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு ஒருபக்க அளவில் கட்டுரை வரைக : **(237-240)** **1X10=10**

   முன்னுரை – நூல்களின் தோற்றம் – பண்டைய நிலை – நூலகத்தின் வேறு பெயர்கள் – பொது நூலகத்துறை – பள்ளியும் நூலகமும் – நூலகமும் பயன்பாடும் – நூலகத்தின் நன்மைகள் – முடிவுரை.

9. தமிழாக்கம் தருக : **(103)** **3**

   Letter writing is an art. This can be perfected through constant practice. We write letters to keep in touch with friends and relatives and to carry important information. Letters are a form of conversation because they involve personal and direct communications between two people. So, every educated person should know how to write a clear and readable letter.

10. செம்மொழி சிலேடை அணியை விளக்குக : **(242)** **3**

11. இணையான தமிழ் பழமொழியைக் கூறுக : **(246)** **4**

    (i) You must walk before run.
    (ii) Make hay while the sun shine.

## குறுந்தேர்வு 12 - 2018-19

10 – ஆம் வகுப்பு **தமிழ் இரண்டாம் தாள்** மதிப்பெண்கள் : 40

குறுவினாக்கள் : (ப.எண்) **5X2=10**

1. பொருந்தாக் காமம் பற்றிய திணை யாது? (191)
2. நால்வகை பாக்கள் யாது? (216)
3. வெண்பாவின் வகைகள் யாவை? (216)
4. குறள்வெண்பாவின் இலக்கணம் யாது? (216)
5. ஆசிரியப்பாவின் வகைகள் யாவை? (219)

ஐந்து மதிப்பெண் வினாக்கள் : **2X5=10**

6. குறிப்பு எழுதுக.

   அ). நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் (77)

   ஆ).தகவல் அறியும் உரிமைச் சட்ம் (77)
7. எம்.ஜி.இராமச்சந்திரன் பற்றி குறிப்பு எழுதுக. (118–119)
8. கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு ஒருபக்க அளவில் கட்டுரை வரைக. (197-198) **1X10=10**

   பாரதியார் – பிறப்பும் இளமையும் – விடுதலை வேட்கை – தேசியக் கவிஞர் பாரதியார் – முன்னறி புலவர் பாரதியார் – சமுதாயத் தொண்டு – பாரதியாரின் பாடல்கள்.
9. சாலை வசதி வேண்டி ஊராட்சி மன்றத் தலைவருக்கு கடிதம் எழுதுக **1X10=10**

# பள்ளிக்கல்வித்துறை

## வேலூர் மாவட்டம்

**அனுதினமும் கற்போம்**
**ஐயமின்றிக் கற்போம்**
**அடைவோம் நாமும்**
**நூற்றுக்கு 100**

திரு. **சா. மார்ஸ்**

**முதன்மைக் கல்வி அலுவலர்,**

**வேலூர் மாவட்டம்**